உ

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

விவேகோதயம்.

மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தினின்று
வெளிவரும்
மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"அறிவுடையார், எல்லாம் உடையார்; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்"—திருக்குறள்.

தொகுதி உ. } பிங்கள ௵ சித்திரை ௴ 1917 ௵ ஏப்ரல் ௴ { பகுதி ௧.

புதல்வர் கடமை.

(86-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

தந்தையின் பொருட்டுத் தன்சுக மிழக்க மனமுவந்து சம்மதித்த நம் பூருவைப் போல், அவ்வளவு செயற் கருஞ் செயல்கள் செய்திலனாயினும், இயன்றவரை, அவனினும் சிறுபருவத்தில அது செய்ய உடன்பட்ட ஓர் சிறுவனது உண்மைச் சரிதையும் ஞாபகத்திருக்தத் தக்கதே. இச் சிறுவன் அநேக ஆயிரம் வருஷங்களுக்கு முன்பு இருந்தவனல்லன். நம்மில வயது சென்றோர் பலர் அவனை அறிவர். சிலர் அவனைப் பார்த்துமிருக்கலாம். சென்னை வாசிகளும் சித்தூர் வாசிகளும் அவனுடன் நேரில் சம்பாஷித்து ஆநந்தம் அடைந்தே இருக்கிறார்கள். இப்பையன் யாரெனில், 1819௵ சித்தூர்க் கடுத்த ஒரு சிறு கிராமத்தில ஓர் ஏழைப் பிராமணனது மகனாகத் தோன்றியவன். ரங்கநாதன் என்பது இவன் பெயர். வறுமைப் பிணியால் வருந்திய இவன் தந்தை ஓர் 'இஜாரா'வை எடுத்தார். ஆயினும் அவர் துரதிர்ஷ்டம் விண்ணினறு பொய்த்ததால் விளைவு அஃகியது. இதனால் சர்க்காருக்குச் சேரவேண்டிய கந்தாயம் செலுத்தச் சக்தியற்றவராய்விட்டமையின், அவர் 'ஸிவில் ஜெயி'லில் வைக்கப்பட்டார். சிறைவாசியாகி அவர் இருக்குங்கால் அவரது தகப்பனாரது திதி வந்தது. சாஸ்திரியார் குடும்பம் பரம வைதிக குடும்பம். ஒருநாள் துக்க மேலிட்டால், அவர் மனைவி, தனக்கு ஆறுதலளிக்க வந்த மகனை நோக்கி, "ஐயோ! உன் தந்தைசெய் பிதுர்க் கர்மம் ஆதங்கமின்றி நடைபெற வேண்டுமே! இப்பாவத்திற்கு என் செய்வது?" என்று அழுதாள்.

தன் தாய் இருந்த பரிதாப நிலையைப் பத்தே வயது நிரம்பிய ரங்கநாதன் கண்டதும், மனம் சகியாது, அனலிற் பட்ட புழுவெனத்துடி

த்தான். பிறகு அவன் வீட்டில் இல்லை. அவன் தாய் அவனைப் பல இடங்களிலும் தேடியும் காணவில்லை. வீட்டினின்றும் புறப்பட்டவன் எடுத்தான் ஓட்டம் சித்தூருக்கு. அங்கு, ஜில்லா ஜட்ஜாக இருந்த காலமேனா துரையைக் கண்டான். ஹா! என்று கதறி விஷயத்தைக் கூறிக் குறை யிரந்தான். துரையின் மனம் இளகிவிட்டது. துரை சிறுவனை நோக்கி, "நீ சொல்வதெல்லாம் சரிதான் தம்பி. பிணையின்றி நான் உன் தந்தையை அனுப்ப மாட்டேனே!" என்னலும், ரங்கநாதன், தன் தந்தைக்குப் பிணை தனையன்றி வேறெவரும் இல்லையென்றும், பிதுர்க்கடன் முடிந்து தன் தந்தை திரும்பும் வரை, தானே அவருடைய ஸ்தானத்தில் இருப்பதாகவும் கூறினான். இச் சிறுவயதில் அவனுக்கு இருந்த பிதாப் பக்தியை வியந்த துரை, உடனே அவனது தந்தைக்கு விடுதலைப் பத்திரமே எழுதித் தந்து, ரங்கநாதனுடன் அவரை அவனூருக்கு அனுப்பினார். இருவரும் வீடுவந்து சேர்ந்தனர், தனக்கு ஏற்கனவே இருந்த துயரத்துடன் மகனையும் காணாது தவித்துக் கொண்டிருந்த தாய், அவனைக் கண்டதாலும், தலைமகனாலேயே தன் பர்த்தா மீட்சியுற்ற செய்தியறிந்ததாலும் அடைந்த ஆனந்தத்திற்கு அளவுண்டோ? அவள், அவனை ஈன்ற பொழுதிற் பெரிதுவந்து, தன் நாதனின் வருந்தலம் பாராட்டி ஆனந்த பாஷ்பம் சொரிந்தனள். இச்சிறுவனிடம் இளமையிலேயே இத்தகைய குணம் இருந்ததனால், இவன் எய்திய பதவியைப் பாருங்கள்! "அருங்கலை விநோதராகிய C. V. ரங்கநாதசாஸ்திரியார்" என்ற புகழ்கிடைத்தது இச் சாஸ்திரியாரே சென்னைச் சர்வகலா சாலைப் பிரதம சுதேச அங்கத்தினர். இவரே சுதேசியருள் விளங்கிய முதல் ஸ்மால்காஸ் ஜட்ஜ். இவர் தமிழ் தெலுங்கு, மலையாளம் கன்னடம், மராத்தி, பெங்காலி, ஹிந்துஸ்தானி, பர்ஷியன், அரபி, ஸம்ஸ்கிருதம், லாதின், கிரீக், பிரெஞ்ச், ஜர்மன், ஹீப்ரு என்னும் பாஷைகள் பதினெட்டிலும் பாண்டித்தியம் வாய்ந்து, 1881-ஆம் வருஷம் இவ்வுலக வாழ்க்கையை நீக்கும் வரை சுகஜீவியாகவும் சீரும் சிறப்பு முற்று வாழ்ந்தனர். நிற்க.

தந்தை, குறைபிரப்பச் சக்ஷணமே இளமை தந்த முதுமை பெற்று அவனது குறை நீக்கி மகிழ்வித்த பூருவின் புண்ணியச் சரிதையும், தாய், குறைபிரப்பச் சற்றேனும் தயங்காது ஓடிக் கங்கையை மீட்டி வந்து அகம் களிரச் செய்த அரங்கநாத சாஸ்திரியின் அரிய செய்கையும், "சிந்தைக்கினிய, செவிக்கினிய, வாய்க்கினிய," என்று உவக்கும் சகோதர சகோதரிகளே! இவ் விருவரினும் பெருமை பெற்றோராக மற்றொரு சிறுவனது செயற்கருஞ் செயல்களையும் கேளுங்கள்: பூருவும் அரங்கநாதனும் முறையே தம தந்தையும் தாயும் குறையிரந்த பின்னரே, அக்குறைகளைத் தவிர்த்தனர். நாம் சொல்லப் புகும் சிறுவனோ, தன் தந்தைக்குற்ற குறையைத் தானே வலிய அறிந்து தீர்த்துப் புகழுற்றவன். அவனது இதமான சரிதம் இது:

சந்திர வம்சத்தில் உதித்த சந்தனு என்னும் மகாராஜன், ஒரு நாள் கங்கையைக் கண்டு காமுற்றுத் தன்னைக் கல்யாணம் செய்து கொள்ளுமாறு வேண்டினன். அதற்கு அவள் "என் வயிற்றிற் பிறக்கும் மக்கள் விஷயமாக, பல்லோர் நடுங்கும் செய்கைகளையே யான் புரியினும் நீர் பொறுக்க வேண்டும். என்றைக்கு என்னைத் தடுப்பீரோ அன்று உம்மிற் பிரிவேன். இதற்குச் சம்மதமாயின் உம்மை மணக்கத் தடையே இல்லை" என்றாள். அரசனும் அதற்கிணங்கி அவளைக் கல்யாணம் செய்து கொண்டான். கங்கையின் வயிற்றிற் சந்தனுவுக்கு ஒருவர்பின் ஒருவராக ஏழு புத்திரர்கள் தோன்றினர். ஆயினும் இவர்கள் பிறந்ததும் கங்கையாற் பேராற்றில் எறியப்பட்டனர். மன்னவனுக் கிருந்த மனவருத்தம் இவ்வளவு அவ்வளவில்லை. ஆயினும் மனைவிக்கு அளித்த வாக்கை நினைந்து ஏதும் வாய்திறவாது இருந்தான். பிறகு இவ்விருவர்க்கும் எட்டாவதாக ஒரு குழந்தை பிறந்தது. தாய் வழக்கப்படி இதனையும் ஆற்றில் எறிய எடுத்துச் சென்றபோது, ஏற்கனவே மனநொந்த சந்தனு, சிசுஹத்தி சகியாதும், புத்திரவாஞ்சை மேலிட்டும் விரைந்தோடிச் சென்று, கங்கையைத் தடுத்து, "அன்பே! யான் யாசிக்கும் இப்பிழை பொறுத்தி நம் மரபு நிலை பெற இம்மகவையேனும் கொல்லாது அருள் புரிக" என வேண்டினன். வேண்டவே கங்கை, அவன் தனக்குக் கொடுத்திருந்த உறுதிமொழியினின்றும் பிறழ்ந்ததனாலே, தன் நிபந்தனைப் பிரகாரம் அவனைவிட் டகன்றனள். ஆயினும், அவள் தன் கணவனிடமிருந்து "தேவவிரதன்" எனப் பெயரிய அம்மகவை எடுத்துச் சென்று, அவனுக்கு வசிஷ்டர் முதலியோரிடம் நாலுகலைகளையும், பரசுராமராதியோரிடம் அஸ்திர சஸ்திர வித்தைகளையும் பயிற்றுவித்து, பின்பு அவனுடைய பிதாவிடம் அவனை விடுத்து, சந்தனுவிடம் பிரியா விடைபெற்று, அவனை நோக்கி,

"மகப்பெறு மவரில் ஒருவரும் பெறாத
மகிழ்ச்சியும் வாழ்வும் மெய் வலியும்
மிகப்பெறும் தவம் நீ புரிந்தனை. நினைநீ
வேறினி வெல்லவல் லவர்யார்?
உகப்புற இவனோ(டு) அவனியாளுக" என்(று)
ஓடிக்(கு) ஓரடிவைத்துத்
தகப்பெறு மயிலதன் தலைவன்மேல் உள்ளம்
தனைவுறத் தடம்புனல் புகுந்தனள்.

மன்னனுக்கு இம்மனைவி மறைந்ததால் உண்டான மனத் துயரத்திற்கோர் அளவில்லை. ஆயினும் மகனைக் கண்ணுறுந்தோறும் எழுந்த மட்டற்ற மகிழ்ச்சியே அவனது மனச்சஞ்சலத்தை ஒருவாறு மாற்றிய தென்னலாம். பிரிந்த மனைவியின் பிள்ளையாதல் பற்றியும், அவளது ஞாபகார்த்தமாகவும், "காங்கேயன்" என்னும் பெயரா

கேயே மகனை அவன் அன்று முதல் அழைக்கலானான். சின்னாட்களுக்கெல்லாம், பாகீரதி கூறிய படியே, சந்தனு, தனது அருந்தவப் புதல்வனுக்கு இளவரசுப்பட்டம் கட்டிச் செங்கோல் செலுத்தி வந்தான்.

ஒரு நாள், சந்தனுராஜன் வன விலங்குகளால் நகரவாசிகட்குற்ற துன்பத்தை நீக்குமாறு காட்டிற்கு வேட்டைமேற் சென்றான். துஷ்டப் பிராணிகளை வதைத்ததன் பின், அவன் தனது பரிவாரங்களுடன் பாசறைக்குச் சென்றான். அஃதொரு பர்ணசாலை. அங்கு அவன் தங்கியிருந்த பொழுது, சுற்றிலும் சுகந்தக் காற்று வீசவே, அவன், "காற்றிற் கேது இயற்கை மணம்?" என்று ஐயுற்று, உண்மையறிந்து வருமாறு, தேர் ஏறி, காற்று வந்தவழி நோக்கி வெகு தூரம் சென்றான் ஒரு யோஜனை தூரம் சென்றதும், காளிந்தி நதிக்கரையில் அழகுமிக்க ஓர் அரிவை நிற்கக் கண்டு, அவள் தேகத்தினின்றும் எழுந்த பரிமளத்தாலேயே காற்றும் பரிமளமுற்ற தென்பதையும், அவள் பரதவர் (வலைஞர்) தலைவனது பாவை என்பதையும் நன்கறிந்தான். அரசன் அவளது அந்தஸ்தைக் கருதாது, அவள் பேரழகில் ஈடுபட்டு, அவள் தந்தையிடம் சென்று, தனக்கு அவளை மணக்க இருக்கும் விருப்பத்தைத் தன் தேர்ப்பாகன் மூலம் குறிப்பித்தான். அது கேட்ட தாசராஜன் (பரதவர் தலைவன்) தலைவணங்கி, "கண்ணிய மிக்க புண்ணியனான பூருவின் மரபிற் பிறந்த கோமகன் என் புன்குல மகள்தனை மணத்தல் பொருந்துமோ? அன்றியும், அரசனுக்குப்பின் பாகீரதி மகனே பட்டத்திற்குரியவனாகலின், என் மகள் வயிற்றிற் பிறக்கும் பிள்ளைக்கேது பட்டம்?" எனப் பரிதபித்துக் கூறினன். அருமருந்தன்ன தன் புதல்வனது அரசுரிமைக்கு இம் மணம் ஓர் இடையூறாக நின்றமையின், அரசன் புண்பட்ட மனத்தினனாய் அரண்மனை திரும்பினான். ஆயினும் பரிமளகந்தி மீதுற்ற தணியாக் காதல்நோயால் அவன் தேகம் வரவர இளைத்தது. அரசாட்சியிலும் அவன் கவனம் முறைப்படி செல்லவில்லை. தந்தையின் துயரத்திற்கும், திடீரென அவனிடம் காணப்பட்ட மாறுதல்களுக்கும் காரணம் அறியக் காங்கேயன் கொண்ட சிரமம் இவ்வளவு அவ்வளவில்லை. கடைசியில் சந்தனுவுக்குத் தேரோட்டிக் கொண்டு சென்ற பாகன் மூலமாக உண்மை வெளிப்பட்டது.

தக்ஷணமே, காங்கேயன் தாசராஜனிடம் சென்று, அவனுக்கு இனியன கூறித் தன் தந்தைக்குப் பரிமளகந்தியைத் தருமாறு வேண்ட, அவன், "இளவரசே! இச்சம்பந்தம் எனக்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டும். ஆயினும் ஒன்று: மகா பராக்ரம சாலியாகிய நீர் உமது பிதாவுக்கு இருக்கும் போது, என் மகள் வயிற்றுப் பிள்ளைகட்கேது ராஜ்யம்? உமது தந்தை என் மகளிடத்துள்ள காதலால், ராஜ்யத்தை உமக்கு ஈயாது, அவள் வயிற்றிற் பிறக்கும

பிள்ளைகட்கே தர உடன்பட்டாலும், நீர் சும்மா இருப்பீரா? நீரோ அசகாய சூரர். நீரே நானோ என் மகளுக்குப் பகைவராகக் கூடுமே! உம்மாற் பகைக்கப்பட்டவர் உயிர் வாழ்தலும் கூடுமோ? மகா தார்மிகராகிய நீரே சொல்லும்'' என்றான். இதனைக்

> கேட்டஅக் கணமே கடற்புரத்தரசைக்
> கேண்மையா ராட்டிஅவ் இளைஞன்,
> "பாட்டன் நீ யெனக்கு. பெற்றதாய் தானும்
> பகீரதி அல்லள். நின் மகளே.
> நாட்டம இன்(று) உனக்கு யா(து)?. அது கில. இஞ்
> ஞாலமும் எம்பியர் ஞாலம்.
> நீட்டம் அற்(று) இன்றுன் மகளை எந்தைக்கு
> நீ அளித் திடு''கென வேண்டி,

அவனை நோக்கி, "ஹே! பாகவர் இறைவ! சூரிய சந்திரரும் உலகோரும் அறியக் கூறுகிறேன: என் தந்தைக்குப் பிற்காலம எனக்குரிய ராஜ்யத்தை உனது புத்திரி வயிற்றில் உதிக்கும் என் சகோதரர்க்கே தந்தேன்! தந்தேன்!! தந்தேன்!!!'' என்று கையடித்துச் சத்தியம் செய்து கொடுத்து, "இன்னும் ஏதாவது ஆக்ஷேபம் உண்டா?'' என்று கேட்டான்.

தாஸராஜன் அவனை வியந்து, "ஐய! நீர் வாக்குத்தவற மாட்டீர் என்பதை நன்கறிவேன். ஆயினும், இனி உமக்கு ஒரு புதல்வன் தோன்றுவானேல், அவன் மனம் எப்படி இருக்குமோ? இது தான் கொஞ்சம் யோசனைக் கிடமாக இருக்கிறது.'' என்றான்.

காங்கேயன் அவனை நோக்கி. "நீ கேட்பது சரியானகேள்வியே. அதற்கும ஒரு வழி சொல்லுகிறேன் கேள்:"ஹே தாஸராஜன்! இராக்காலத்தில் எண்ணிறந்த தீபங்கள்போல விண்ணுலகிற் பிரகாசிக்கும் நக்ஷத்திரங்களின் ஒளி மழுங்கி இருளினும் இருளும். காலையில் கிழக்கே உதித்து மாலையில் மேற்கே அஸ்தமிக்கும் சூரியன் அசலமாக ஓரிடத்தில நிற்பினும நிற்கும; எவருக்கும் பிரத்யக்ஷமாகத் தோன்றும் ஸத்யம் அஸத்யமாகப புரளினும் புரளும் நான் இபபொழுது உனக்கு அளிக்கும் வாக்கினின்றும் ஒரு நாளும் தவறேன். இதுவே நான் செய்யும ஸத்யம்: இச் சரீரத்தினின்றும் உயிர் பிரியும் வரை இந்திரிய *வாதைக்கே இடங் கொடேன். என் தந்தையின் மனத்துயரம் நீங்குமாறு, என் வாழ்நாள் முழுதும் பிரமச்சரிய விரதத்தையே பூண்பேன். விவாகமே செய்து கொள்ளேன்! கொள்ளேன்!! கொள்ளேன்!!!'' "மகாபெரு மானிடர்கள்

வானவர்தம் ஊர்க்குப் புகப்பெறார்" என்பர். ஆயினும் மகப்பேற்றால் அடையும நற்கதியை, 'தந்தை மனமகிழ் வித்த'லாகிய புண்ணியத்தாற் பெறுவேன. இஃதாண்மை. எனக்கு இச்செயலால் அளவற்ற நல்லுலகே வாய்க்கும். போதுமா பிரதிக்ஞை? ஆக்ஷேபம் மற்றும் உண்டோ? உண்டாயிற் சொல்க" என்றான். (இப் பயங்கரமான விரதத்தை யுடையவனாதலின், 'தேவவிரதன்' என்ற 'காங்கேய'னுக்குப் "பீஷ்மன்" என அன்று முதல தேவரும் யாவரும் பேரிட்டனர்.)

பரதவர் தலைவன் ஆக்ஷேபம் வேறு எதுவும் கூறாது தன் மகளைச் சந்தனுவுக்குத் தர உடன்பட்டான் பீஷ்மன் அவளைச் சந்தனுவிடம் அழைத்துச் சென்று, நிகழ்ந்தன கூறி, மணக்குமாறு வேண்டினன். உடனே, சந்தனு, வியப்பும் விசனமும் மேலிட்டவனாகி, தன் மகனைத் தழுவி, "நான் என்ன தவம் செய்தேனோ மகனாக உன்னைப் பெற? தந்தைக்கு இளமை கொடுத்த பூருவும் நினக்கு நிகரல்லன். எனதருஞ் செல்வமே!

'துறக்கரிய வாழ்வதனைத் துறந்தனை நீ என் பொருட்டால்;
பெறற்கரிய பெரும் பேற்றைப் பெற்றனன் நின் பேறிவால்."

எனவியந்து,

"தந்தையர்க்(கு) உதவும் உதவியின் எனக்குச்
சதமடங்(கு) உதவினை. உனக்கோ
மைந்தருக்(கு) உதவும் உதவியிற் சிறிதும்
மாதவம் செய்திலேன் உதவ"

என்று ஆனந்தக் கண்ணீர்விட்டு, "மகனே! நீ

'சிந்தையில் துறக்கம் வேண்டும்' என்றெண்ணிச்
செல்லும் அன்றல்ல(து,) உன் உயிர்மேல்
முந்துறக் காலன் வரப்பெறான்" என்றே
முடிவிலா ஒருவரம் மொழிந்தான்.

இவ்வரத்தின் மகிமையால்தான், பீஷ்மன் எமபாதையின்றி, தன் இச்சைப் பிரகாரம், ஜீவனை விடும் ஸ்வதந்திரம் உற்று, உத்ராயண புண்ணிய காலத்தில், பாரதயுத்தத்தில் உயிர் விட்டது என அறிக.

(இன்னும் வரும்.)

பத்திராதிபர்.

சாணக்கிய ஸாஹஸம் என்னும்

சந்திரகுப்த சரித்திரம்.

மூன்றாவது அத்தியாயம்.

ராக்ஷஸனும் பாகுராயணனும்.

இதற்குள் மந்திரியான ராக்ஷஸன், இப்பொழுது 'நவநந்தர்களையும் ஸம்ஹரித்து ஜயமடைந்து விட்டோம்' என்று இறுமாந்து இருக்கும் சத்துருக்கள், இப்பட்டணத்தையும் எப்போது வந்து வளைகின்றார்களோ! அங்ஙனம் அவர்கள் செய்துவிடுவார்களாகில், சத்துரு சைனியத்தி லிருக்கும் மிலேச்சர்களும் துருக்கர்களும் ராஜ ஸ்திரீகளுக்கும் பட்டமகிஷிகளுக்கும் பெருத்த துன்பத்தையும் அவமானத்தையும் விளைவிப்பதில் தடையே இல்லை. இப்பொழுது ராஜ்யம் 'அநாயக'மாயிருப்பதால், பட்டணத்திற்கு உள்ளும் வெளியிலும் இருக்கும் சைனியங்கள் சத்துருக்களைத் தகைந்து மேல்விழுந்து யுத்தம் செய்யப் போகிறதில்லை. அவரவர்கள் தங்களுயிரைக் காப்பாற்றிக் கொள்வதிலேயே கருத்தாயிருக்கும் இச்சமயம், நானே நேரில் நின்று கட்டளை யிட்டபோதிலும், அவர்கள் கண் மறைவாக ஓடி ஒளிப்பார்களேயன்றி, மேற்படிந்து யுத்தம் செய்ய மாட்டார்கள். நகரம் கொள்ளைபோவதுடன் வேறு பிரமாத ஆபத்தும் உண்டாய்விடும்.: "இதுவரையிலும் ராஜாதி ராஜனாய், கீர்த்திமானாய் இருந்து, விருத்த பருவத்தை அடைந்திருக்கும் ஸர்வார்த்த ஸித்தி மகாராஜா அவர்கள், தம் புத்திரர்களை யிழந்து பரிதவிக்கும் வேளையில், தமது அந்தப்புரத்திலுள்ள ஸ்திரீகளை மிலேச்சர்கள் அவமதிப்பதையும் தம் கண்களால் கண்டார்" என்ற பழிச் சொல்லுக்கிடமின்றி இம்மட்டோடாவது இருக்கட்டும்" என்று தனக்குள்ளே நிச்சயித்து, அருகிலிருந்த ஒருவனை அழைத்து, "நமது சேனாபதியான 'பாகுராயணன்' எங்கிருந்தாலும் தேடியறிந்து, 'உடனே என்னைக் கண்டு பேசிவிட்டுப் பிறகு எவ்வித அவசர காரிய மிருந்தாலும் அதனைப் பார்க்க வேண்டியது' என்று நான் சொன்னதாகச் சொல்லி அழைத்துவா" என்ன, அவன், எங்கும் சென்று, கடைசியில் அரண்மனையிலிருந்து வந்துகொண்டிருந்த பாகுராயணனைக் கண்டு "ஸ்வாமீ! அமாத்தியர் உங்களைக் கூடிய சீக்கிரம் கையோடு அழைத்துவரும்படி உத்திரவிட்டிருக்கிறார்" என்றான்.

பாகுராயணன் உடனே ராக்ஷஸனிடம் வந்தான். நவநந்தர்களை நினைத்து நினைத்து இருவரும் பிரலாபித்து, ஒருவாறாக மனதை ஸமாதானப் படுத்திக் கொண்டனர். பிறகு ராக்ஷஸன், "ஐயா! பாகுராயணா! இன்றோடு நமது புத்தி பலம் பௌருஷம் இவைகளெல்லாம் வீணாய்விட்டன. இப்பொழுதோ, இன்னும் சற்றுநேரத்திற்குள்ளோ, சத்துருக்கள் இபபட்டணத்தை வளைந்து கொள்வார்கள் என்பது நிச்சயம். இதுபற்றி உன் அபிப்பிராயமும் யோசனையும் என்ன?" என்று கேட்டான்.

பாகுராயணன்: "ஸ்வாமி அமாத்தியரே! புத்தியிலும் ஆலோசனையிலும் தங்களைக் காட்டிலும் நான் அதிகமானவனோ? தாங்கள் சொல்வதை யனுசரித்தே எப்பொழுதும் நடந்து வந்திருக்கிறேன் இப்பொழுதும் தங்கள் உத்திரவைச் சிரஸால் வகித்து நடக்கக் காத்திருக்கிறேன். ஆயினும, தாங்கள் அநுமதியளித்தால் எனக்குத் தோன்றியதை விக்ஞாபனம் செய்துகொள்கிறேன்: இப்பொழுது நவநந்தர்கள் நாச மடைந்ததாலும், விருத்த தசையில் புத்திர சோகத்தினால் பிராணாபிமானமற்று, ஜட ஸ்வரூபமாக இருக்கும் ஸர்வார்த்தஸித்தி அரசரின் ஜீவதிசையில் நம்பிக்கை ஏற்பட நியாயமில்லா திருப்பதாலும், வேறு ஆதாரமற்று நாம் தவித்துக் கொண்டிருக்கிறோம். இச்சமயத்தில், சத்துருக்களின் உபத்திரவம் ஒரு சிறிதும அற்றவனும, கொடையாளியும், பிரஜைகளின் மனதைச் சந்தோஷிக்கச செய்து அவர்களை ஸ்வாதீனப் படுத்திக்கொள்ளக் கூடிய சாமர்த்தியசாலியும், விநயாதி குணசம்பன்னனுமாக இருப்பவன், சந்திரகுப்தனே. நமது ஸர்வார்த்தஸித்தி யரசனுக்குப் பேரனும், இப்பொழுது சகல விதத்திலும் இவ் விராஜ்ய கோசங்களுக்கு உரியவனாகவும் அவனே இருப்பவன். இச் சந்திரகுப்தன் அளவற்ற சேனைகளுடன் தண்டிறங்கி இப்பொழுது ஜயசீலனாக விருப்பதால நமது பக்கத்திய ஜனங்களுக்கு யுத்தம் செய்ய வேண்டுமென்ற ஆவேசமும் அஹங்காரமும் லவலேசமு மில்லை. எல்லோரும் கவலையற்றுத் தங்கள் காரியத்திலேயே கண்ணாயிருக்கிறார்கள். அரசனற்று இருக்கும இந்த ராஜ்யத்திலுள்ள பிரஜைகளைத் துன்பப்படுத்தக் கூடிய துஷ்டர்களை யடக்குவதற்குக் கூட நமக்கு நேரமில்லை. அன்றியும அது அஸாத்யமான காரியம். ஆகவே

இனிச்சத்துருக்களைத் தகைந்து யுத்தம் செய்வது எங்ஙனம் இயலுமோ? என்னையோ நகர ரக்ஷணத்தின் பொருட்டு நியமித்து இருக்கிறீர்கள். நான் கோட்டைமீது எதிரிகள் 'லங்கர்' ஏற்றிப் பிரவேசியாது யுத்தம் செய்து கொண்டிருக்கிறேனே. பத்ரபடன் முதலிய தளகர்த்தர்களும் தத்தம சைனியங்களுடன் எங்கேயோ மறைந்திருக்கிறார்கள். சத்துருக்கள் கோட்டையை முற்றுகையிட்டு என்னையும் மீறிப் பட்டணத்திற்குள் வந்து அந்தப்புரத்தில் ஹடத்துடன் பிரவேசித்து விட்டால் என்ன செய்கிறது? நம்மை இதுவரையிலும பெற்ற பிள்ளைகள் போல் காப்பாற்றிவந்த அந்தப்புர ஸ்திரீஜனங்களை இவர்கள் கண்ணால் பார்த்தாலும் அதைக் காட்டிலும் நமக்கு வேறு அவமானமும் லோகாபவாதமும் உண்டோ? அப்பொழுது இதுவரை நாம் பிழைத்த பிழைப்பு என்ன ஆய்விடும்? நமது ஜன்மத்தை நெருப்பிலிட டன்றோ சுடவேண்டும்? இதற்குமேல் யான் என்ன சொல்ல இருக்கிறது? தாங்கள் எவ்விதம் உத்திரவிட்டாலும் அவ்விதமே நடக்கக் காத்துக்கொண் டிருக்கிறேன'' என்றான்.

இது கேட்டு ராக்ஷஸன், தனக்குள், "யாது காரணம் பற்றியோ இப் பாகுராயணன் யுத்தம் செய்வதில் இஷ்டமில்லாமல் இருக்கிறான். எனது கட்டாயத்தினாலும் பிரயத்தனத்தாலும் இப்பொழுது ஒன்றுமே முடியாது. ராஜபத்னிகளின் மானத்தைக் காப்பாற்றும் நிமித்தம் இப்பொழுது கோட்டை கொத்தளங்களின் திறவுகோலைச் சந்திரகுப்தனிடம் வலுவில் ஒப்புவித்து, அவனை அரசனாக ஏற்று, நகருக் கழைத்துவர வேண்டியது அவசியமாயிருக்கிறது. கவலை ஏன்? நான் வனமறைவிலிருந்து தக்க வழியில் முயற்சி செய்து, காரியத்தை ஜயித்து, பரலோகத்திலிருக்கும் நந்தர்களுக்குச் சந்தோஷத்தை உண்டு பண்ணுமலிருக்கமாட்டேன்" என்று நிச்சயித்து, "ஐயா! பாகுராயணா! நீ சொன்னவைகள் முழுதும் சரி என்றே எனக்கும் தோன்றுகிறது. தெய்வ யத்தனத்தால் நடந்தது நடந்து விட்டது. அதற்காக இனிநாம் ஆவேசங்கொண்டு செய்யும் ஸாஹஸ காரியங்களைக் கண்டு ஸந்தோஷிப்பவர்களுமில்லை தான். ஐயோ! அடியோடு நந்தர்கள் ஒன்பது பேரும் ஒரே காலத்தில் மாண்டு விட்டார்களே! இனி நாம் என்ன ஸாஹஸங்கள் செய்தாலும் கூடிவரப் போகிறதா? ஜீவித்திருக்கும் ஜனங்களை

ரக்ஷிப்பதின் பொருட்டுச் சந்திரகுப்தன் தடையேது மற்றுச் சுகமாகப் பட்டணத்திற்குள் வந்ததும், எல்லா ஆசையையும் ஒழித்து விரக்தனாகிப் புத்திர சோகத்தில் மூழ்கிக் கிடக்கும் கிழவரசன் செய்யக்கூடியதும் சொல்லக்கூடியதும் என்ன இருக்கிறது? நாமும் நமது மனம் ஒப்பி அங்ஙனம் செய்ய இடங்கொடுத்ததால் சந்திரகுப்தனுக்கும் இப்படிந்து அவன் ஆக்ஞைக்கு உட்பட்டு நடக்கலாம். ஆகலால் சத்துருக்கள் பட்டணத்தை வளைந்து கொள்வதற்கு முன் திறவுகோல்களைச் சீக்கிரமாகச் சந்திரகுப்தனிடம் ஒப்புவித்துவிடு" என்று உரைத்து பாகுராயணனை அங்ஙனம் செய்து வருமாறு அனுப்பினான்.

நான்காவது அத்தியாயம்.

ராக்ஷஸன் ஸர்வார்த்தஸித்தியைத் தேற்றுதல்.

பாகுராயணனை அனுப்பிய பிறகு, ராக்ஷஸன் அங்கிருந்து வெளியில் வந்து, விருத்த அரசனது துக்கத்தை ஸமாதானப் படுத்தும் வண்ணம் ராஜக்ருஹத்தின் அருகில் வரும்போது, அங்கு வெகு நேரமாகக் கதறி யழுததினால் தொண்டை வற்றிப் போய்க் கம்மியிருக்கும் குரலுடன், "ஹா! நாதா! ஹா! பதியே! ஹா! பிராண நாயகா! ஹா! குமாரர்களே! ஹா! குழந்தைகளே! ஹா! கண்மணிகளே! ஹா! பாலகர்களே! ஹா! விதியே! ஹா! தெய்வமே! ஹா! துரதிருஷ்டமே! ஹா! மக்களே! ஐயோ! புத்திரர்களே!" என்று இவ்விதம் பிரலாபிக்கும் நானா ஸ்திரீகளின் பிரலாபத்தையும், "வேண்டாம் அம்மா! சற்றுப் பொறுக்கவேண்டும் அம்மா!" என்று கெஞ்சி மன்றாடும் தாதிமார்களின் குரலோசையையும் கேட்டு, ஸஹிக்கமாட்டாத துக்கத்துடன் அரண்மனைக்குள் சென்றான்.

அப்பொழுது நிலத்தில் விழுந்து கட கட வென்று புரண்டு அழுது மூர்ச்சித்திருக்கும் அரசனைத் தூக்கி எடுத்துச் சாய்த்து வைத்துத் தான் வந்திருப்பதை அரசன் அறியும்படி அவனுக்குச் சைத்தியோபசாரம் செய்தான்.

ஸர்வார்த்தஸித்தி மன்னனுக்குத் தன் நினைவு வந்ததும், ராக்ஷஸன் "மஹா ஸ்வாமி! க்ஷத்திரிய தர்மப்படி, துஷ்ட நிக்ரஹ சிஷ்ட-

பரிபாலனம் செய்து நீதிதவறாது அரசாண்டு வந்த தங்களுக்கு இவ்வித துக்கம் ஏற்படலாமோ? தாங்கள் ஸாதுக்களை வாயதவறியும் தூஷித்ததில்லையே? தேவ பிராமணர்களுக்கும் எவ்வித அவமதிப்பையும் செய்ததில்லையே! அபராதிகளுக்குக் கடுமையானதும் நீதித் தவறானதுமான தண்டனையை விதித்ததும் இல்லையே! போகட்டும், தங்கள் நியாயத் தீர்ப்பிலேனும் பக்ஷபாதம் ஏதும உண்டோ? பூஜிக்கத் தகாதவர்களைப பூஜித்தாவது இருப்பீர்களா? ஒன்றும் இல்லையே! இப்பேர்ப்பட்ட தங்களுக்கு, இமமகத்தான புத்திர சோகமென்னும் துர்த்திசையானது வயதுகாலத்தில் ஏற்படக் காரணம் என்ன? இது பூர்வ ஜன்மத்தின் கன்மப் பயனே. உள்ளபடியே தாங்கள் இப்பிறப்பில ஒன்றும் செய்யவே இல்லை. இத்தீவினை சம்பவிக்க நந்தர்களிடம் ஏதேனும் தோஷ முண்டோ வென்று தாங்கள் ஐயமுறலாம். நான் அவர்களிடம் சேவகனாக இருந்தவன். அவர்களைப் பற்றிக் குறைகூறுவது நியாய மாகாது. ஆயினும் சில சொல்லித்தீரவேண்டி வருகிறது. உள்ளபடியே, அவர்களிடம் சில துர்க்குணங்கள் இருந்தே வந்தன: அதிகாரத்திற்கு யோக்யர்களல்லாத சூத்திரர்கள், வேத மோதும் விப்ரர்களை நிந்தித்து, பிராமண ஸ்திரீகளை உற்று நோக்கல் முதலிய கெட்ட காரியங்கள் செய்வதை அறிந்தும, நந்தர்கள் அவர்களைத் தண்டிக்க வில்லை. தாக்ஷிணியத்தால் கவனியாதது போல் இருந்து வந்தார்கள். நான் தனிமையில் எவ்வளவோ நயமாகவும பயமாகவும சொல்லியும, அவர்கள் கேட்டனரில்லை. ஆகலால் அவர்களது இந்த மகா துரோகத்தாலேயே ராஜ்யத்திற்குக் கெடுதி யேற்பட்டது. 'பிரஜைகளின் பாபம அரசனைச் சேரும்' என்ற வாக்கியப்படி, அந்தப் பாபமே நந்தர்களுக்கு இவ்வித அவமிருத்யுவை யுண்டு பண்ணிற்று. இதற்கு மௌரிய புத்திரனை சந்திரகுப்தன் வியாஜ மானான். மிஞ்சிப்போன காரியத்தைப பற்றி நினைத்தும் விசனித்தும பயனென்ன? தங்கள் வம்சத்தினனாகிய திருதிராஷ்டிரனுக்குப் புத்திர சோக முண்டானது போல தங்களுக்கும் இப்பொழுது உண்டாய்விட்டது. ஆயினும் ஒன்று: யுத்தத்தில மடிவது க்ஷத்திரிய தர்மமாகும. தங்கள் குமாரர்கள் சத்துருக்களின் கபடத்திற்கு உட்பட்டாலும், 'முன் வைத்த காலைப் பின் வைக்காது' சத்துருக்கள் மேல் விழுந்து, ஆயிரக்கணக்கான

சைன்யங்களைச் சங்கரித்து வீர சொர்க்கமடைந்தார்களே யன்றி, 'எதிரிகள் கையில் தெரியாத்தனமாய் அகப்பட்டு விட்டோமே' என்று பின்னிட்டுக் குலத்திற்கு அபகீர்த்தியை உண்டாக்க வில்லை. இக் கலியுகத்தில் இனிமேல் சுத்த க்ஷத்திரியர்கள் இருக்கக் கூடா தென்ற தெய்வசங்கல்பத்தை மீறக்கூடிய சாமர்த்தியம் நமக் குண்டோ? ''இச்சம்ஸாரத்தைத் துச்சமென்று அறிந்து சுக துக்க காலங்களில் மன வேற்றுமை கொள்ளாது ஸமத்வ புத்தியுடன் இருப்பவர்களே விவேகிகள் எனப்படுவர்; அவர்களே மோக்ஷத்திற் கு உரியவர்கள்'' என்று தாங்களே அடிக்கடி சொல்வீர்களே! உல கத்தில், சொல்வது போல் நடப்பவனே சிரேஷ்டன். அதற்குத் தாங் களே முன் நிற்கக் கூடியவர். ஆகையால் பிரயோஜனமற்ற துக்கத் தைத் தள்ளி ஈசுவரனைத் தியானிப்பதில மனதைச் செலுத்த வே ண்டுமே யன்றி வேறில்லை. நான் இனி இங்கு இருந்தால அபசனுக வரும் சந்திரகுப்தன், என்னை 'நந்தர்களுக்கு மித்திரன்' என்று கொன்று விடுவான். இப்பொழுது இங்கிருந்து எங்காவது செல் லப் போகிறேன். சந்திரகுப்தன் தங்களுக்குப் பௌத்திரனுனது பற்றி நந்தர்களிடம் இருந்தது போல் தங்களிடமும் த்வேஷமுள் ளவனுக இருக்க மாட்டான். முந்தியே தங்களுக்குத் தெரிவித்திரு ந்தால் இவ்வளவு அநர்த்தமு முண்டாயிருக்க மாட்டாது. நந்தர்கள் தமக்குத் தாமாகவே இவ்வித ஆபத்தை விளைவித்துக் கொண்டார் கள். இனி, சந்திரகுப்தன் தங்களைக் கண்டு கொள்ளும் சமயங்களில் அவன் மனம வித்யாஸப் படாதபடி சமயோசிதமாயும், முனனுக்குப் பின் விரோதமற்றும, ஒரே விதமாகப பேசி, அவன் கொடுப்பவை களைக் கொண்டு திருப்தி காண்பிததும், அவனையே ஔரஸ புத்திர னென்று பாவனைகாட்டியும் சிறிது காலம போக்குங்கள். மேல் கிடைக்கக் கூடிய க்ஷேம லாபங்களைப் பார்த்துக் கொளவோம். அதைபபற்றி இப்பொழுதே வாயால சொல்வதில் பிரயோஜன மில்லை. ஏதோ, எல்லாம தெய்வகிருபை யிருந்தால கை கூடலாம். நான் போய வருகிறேன'' என்று விருத்தராஜனை சமாதானம் செய் து தன் வீடு வந்து சேர்ந்தான்.

(இன்னும் வரும்.)

வி. பாலம்மாள்.

குசேலர் சரித்திரம்.

(51—ஆம் பக்கத் தொடர்ச்சி.)

கண்ணன் செய்த உபசாரங்களைக் கண்ட ருக்மணி தேவியாரும் அந்தணருக்குச் சைத்தியோபசார முதலியவற்றைச் செய்வதை அங்குள்ள மாதர்கள் கண்டு வியந்து, "இத் திகம்பரனை வேதியன் முற்பிறப்பில் செய்த தவப்பயனால் இப்போது சகல லோக பாலனாக கோவிந்தனால் பூஜிக்கப்பெற்றான்" என்று ஒருவர்க்கொருவர் சொல்லிக் கொண்டார்கள். பிறகு ஸ்ரீ கண்ணபிரான் மறையோனை நோக்கி, "அண்ணா! நீர் குருகுல வாஸஞ்செய்து ஸகல கலைகளையும் பயின்றபின் உமக்குச் சரி யொத்த மனைவி கலியாணமாயிற்றா? தேவரீருக்கு மண்ணாசை, பெண்ணாசை பொன்னாசை இம்மூன்றும் இல்லையென்று நான் முன்னமே அறிவேன். உலகத்தில முதலாவது குரு பிதா. இரண்டாவது குரு உபநயன காலத்தில் பிரமோபதேசஞ் செய்பவர். மூன்றாவது குரு பிரமஞானத்தை உபதேசிக்கின்றவர். இச் சம்சாரமாகிய சமுத்திரத்தைத் தாண்டுகைக்குத் தெப்பம்போல் இருப்பவர் இம் மூன்றாவது குருவே. இப்படிப்பட்ட நல்ல ஆசாரியரைச் சரணமாக வடைந்து அவருடைய கிருபையினால் இலகுவாக மோக்ஷமடைவோனே ஞானியாவான். இத்தகைய குரு கிடைப்பதரிது. அப்படிக் கிடைத்தாலும், அவரிடத்தில் பக்தி பிறவாது, பக்தி பிறந்தாலும் அதற்கு அநேகவித விக்கினங்களுண்டாகும்; விக்கினம நேரிடாவிடினும் உபதேசம்பெற மனம் வராது; மனம் வந்தாலும் உபதேசிக்கிறோ மென்கிறவர்கள் கிடையாது; "உபதேசிக்கிறேன்" என்றொருவன் ஏற்பட்டால் அவனுக்கு யோக்கியதை இராது; கலியுகத்தில் அநேகர் உதர போஷணை நிமித்தம் வெகுவித வேஷம்பூண்டு தம்மிடத்தில் பக்தி இல்லாதவர்களை வரவழைத்து அவர்களுக் குபதேசித்து, அவர்களையுங் கெடுத்துத் தாமுங் கெடுவார்கள். உண்மையான குரு எப்பொழுதும் ஆசார சீலராகவும், பிரம்ம ஞானியாகவும் சாந்தகுணம் நிறைந்தவராகவும் சத்தியவான்களாகவும், வர்ணாச்ரம ஆசாரந் தவறாதவராகவும், படாடோபம் அற்றவராயும், தீக்கடைகோல் தன்னைக் கடைந்தாலன்றி தன்னிடத்திலிருக்கிற அக்கினியை வெளிப்படுத்தாததுபோல், தனது சக்தியை வெளிப்படுத்தாதவராயும், இந்திரிய

நிக்கிரகம் செய்தவராயும், ஜீவகாருண்யராயும், பாப ரகிதராயும், சத்துரு மித்துருக்களிடத்தில் சமபுத்தியுடையவராயும் இருப்பர்.

சற்குருவின் இயல்பு இவ்வாறாக; சீடர்களோ நல்ல பக்தியுடன் குருவுக்குப் பணிவிடை செய்கிறவர்களாயும் பிரும்மக் ஞானத்தை யடைய வேண்டு மென்கிற ஆவலையுடையவர்களாயும், பொறுமை யற்றவர்களாயும், வணக்கமுள்ளவர்களாயு மிருக்கவேண்டும். குரு சீடர்களிப்படி இல்லாவிடில் ஆயிரம் வருடந் தவஞ் செய்யினும் ஒன்றும் லபிக்காது. நாம் குருகுல வாஸஞ் செய்துகொண் டிருக்குங் காலையில், ஒருநாள் நம்மை குரு பத்தினியானவள் விறகு வெட்டி வரச் சொல்ல, நாம் காட்டிற்குச் சென்றிருக்குங் காலையில் பிரளய காலம்போல மழையும் காற்றும் மின்னலு முண்டாகி, நடுக்க மெடுத்துத் திசை தெரியாமல் அலைந்தது ஞாபகமிருக்கிறதோ அண்ணா!" என்று ஸ்ரீ கிருஷ்ணன் கேட்டார். இங்ஙனம் கேட்ட கிருஷ்ணனைப்பார்த்து, சுதாமா என்னும் பெயருடைய குசேலர், "சத்திய சங்கல்பனும ஜகத் குருவாயுமிருக்கிற தேவரீருடைய கிருபை அடியேனுக்குப் பாக்கியத்திற்றானே வாய்ந்தபடியால் அப்போதே சகல அக்ஞானமும் பாவமுந் தொலைந்து பரிசுத்தனாய் விட்டேன்" என்றார்.

இந்தப் பிரகாரம் இருவரும் கல்வியயின்ற காலையிலிருந்த அந்நியோன்னிய பாவத்தைக் குறித்துச் சம்பாஷித்துக் கொண்டிருக்குங் காலையில் ஸர்வேச்வரரான ஸ்வாமியானவர், அக் குசேலர்கொண்டு வந்த மட்டை அவலைத் தனக்குக் கொடுக்க வெட்கப்பட்டிருப்பதையும், ஐசுவரியத்தை விரும்பி மனைவியனுப்பினதைச் சற்றேனும் நினையாதவராய் அதனிமித்தம் தன்னைப் பூஜியாமலிருப்பதையும் அறிந்து, இந்திராதி தேவர்களுக்கும் அரிதான மகதைசுவரியத்தைக் கொடுக்க நிச்சயித்து, புன்னகையோடு குசேலரைப் பார்த்து, "அண்ணா! தேவரீர் வெகுநாட் கழித்து அவ்விடத்திற் கெழுந்தருளினமையால் அடியேனுக்கு ஏதேனும் சிற்றுண்டி கொண்டு வந்திருப்பீர்களே? விசேஷமாய் ஒன்றும் கொண்டுவராததினால் என்ன விதமாகக் கொடுக்கிறதென்று யோசிக்கிறீர்களோ? அவரவர் கருத்தின்மீது எனக்கு திருஷ்டியே யன்றிப் பதார்த்தத்தினிடத்தில் திருஷ்டியில்லை. ஒரு துளசி தளமாகிலும், தீர்த்த

மாகிலும் அன்புடன் கொடுப்பதை அங்கீகரிப்பேனே யன்றி, அன்பின்றி அமுதே அளிப்பினும் அங்கீகரியேன்" என்று வெகுவித மாகச் சொல்லினர்.

அப்பொழுது, வெட்கபபட்டுத் தலைகுனிந்து நின்ற குசேலரை சுவாமி கண்டு, அவரது அவல் மூட்டையைப் பலவந்தமாய் வாங்கி அவிழ்த்து "ஓய், நண்பரே எனக்கு அத்தியந்தம பிரியமான இப் பட்சணத்தைக் கொடாம லிருந்தீரல்லவோ?" என்று அதனது சுவையை மெச்சிக் கொண்டே, உலகமுண்ட திருவாயால் ஒரு பிடி அவலை எடுத்துப் பட்சித்து, இரண்டாவது பிடியை எடுத்தார். எடுக்கும்போதே ஸ்ரீ ருக்குமணி தேவியார், சுவாமியினது கையைப் பிடித்துக்கொண்டு, "ஓ மகானுபாவா! நீ உண்ட ஒரு பிடி அவலுக்கே, இகத்திலும் பரத்திலுமுண்டான சகல சம்பத்துகளும் இவருக்குச் சுவாதீனமாய் விட்டது. இந்த இரண்டாவது பிடி அவலுக்கு இனி நாமல்லவோ வசியமாகவேண்டும்" எனக்கூறித் தடுத்தாள்.

பிறகு கண்ணபிரான் குசேலரை அன்றிரவு அங்கேயே பஞ்சணை மெத்தையில் துயில்வித்தார். மறுநாட் காலையில், முனிவர் நித்திரைவிட்டு எழுந்து, நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்து, அப் புண்டரீகாட்சனிடதது யாதொரு ஐசுவரியமும் வேண்டிக்கொள்ளாது விடைபெற்றுக்கொண்டு, வெகுதூரம் பகவானுல் வழியனுப்பப்பட்டு, தன் ஆச்ரமத்தை நோக்கிவநதார். வருங்காலையில், ஸ்ரீகண்ணபிரானது அன்பையும, கிருபையையும, நினைத்து நினைத்து, அழலைக் கண்ட மெழுகுபோல மனமுருகி, "என்னைப்போன்ற நிகிருஷ்டனுக்கு ஐசுவரிய மளித்தால், செல்வச் செருக்கால் கருணைக் கடலான கடவுளைத் தியானியான்" என்றெண்ணி, கிருபை கூர்ந்து, எம்பெருமான் எனக்குத் தனத்தைக் கொடாமலனுப்பினர்" என்று மனமகிழ்ந்தார்.

இவ்விதமாக நினைத்து வருங்காலையில், தம திருமேனியில் ஓர் திவ்ய காந்தி யுண்டாகி, ரத்ந குண்டல கடக மோதிரங்களும், கேயூர கங்கணங்களும் உயர்ந்த பீதாம்பரங்களும் தெய்விகமாக விளங்கக்கண்டு, "இது எம்பெருமான் திருவருள்போலும்!" என வியந்துகொண்டு ஆச்சிரமத்தை அணுகினர். இதற்கு முன்னரே வாஸுதேவனருளால் அஷ்டைசுவரியமும் அதிகரித்து, ஸ்ரீ வைகுந்தமே

உலகி லிறங்கி வீற்றிருந்தாற்போல தேஜோமயமாய் விளங்குகின்ற மாடமாளிகைகளைக்கண்டு இன்னதென் றறியாமல், பிரமித்து நின்றார். தமது கிரகத்திற்கருகில் வரும் குசேலரைக்கண்ட ஊழியப் பெண்கள் அவரது வரவை மனைவியோடு உரைக்க, அந்த அம்மாள் தமது மைந்தர்களுடன் எதிர்கொண்டுவந்து, ஸ்ரீ பகவானால் உபசரித்தலங்கரிக்கப் பட்ட திருமேனியோடு விளங்காநின்ற தனது கணவரைக்கண்டு, கண்களை மூடிக்கொண்டு சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து, அர்க்கிய பாத்தி யாசமன முதலியன வளித்துப் பூஜித்தாள். இவையெல்லாங் கண்ட குசேலர், சொர்ணமயமான தனது கிருகத்தையும், தான் முன்னிருந்த இருப்பையும் நினைத்து, இப்படிச் சம்பத்துண்டாவதற்கு நான் யத்தனிக்கவில்லையே; நான் கொண்டுபோன ஓர் பிடி அவலை மேருவாக நினைத்து. இவ்வளவு ஸம்பத்தைக் கொடுத்தும், இவ்வளவும், அந்த அவலிற் கிணையாகாவென்று நினைத்தல்லவோ எம்பெருமான் என்னுடன் ஒன்றும் சொல்லாம லிருந்து விட்டார். கருணாநிதியான ஸ்ரீ கோவிந்தனது நாமத்தை ஒருதரம் கீர்த்தனை செய்தாலும் அதை வெகுவாக எண்ணிக் கடைத்தேற்றுவாரென நிச்சயித்து, அப்பகவானிடத்தில் பக்தி செலுத்தி, அவர் முடிவில், தமது மனைவியுடன் ஸ்ரீதரனது திவ்ய மங்கள சொரூபம் பெற்று வீற்றிருந்தார்.

சி. நாராயணசாமி ஐயர், B. A. L. T.

குசேலர் சரித்திர முற்றிற்று.

விடுகதை வினா.

"வடிவினிற் சிறந்தோய்! நின்மருங் குற்ற
மைந்தன் ஆர்?" என்றவன் றனக்கு,
மடவரல், "இவன்றன் தந்தையார், யார்க்கு
மாமனோ, அவன்தந்தை எனக்கு
(நடைபெறும்) மாமன் ஆகும்." என் றனள். அந்
நங்கைக்கும் அம்மக னுக்கும்
(புடவியில்) வழங்கும் முறையறிந்(து) எனக்குப்
புகன்றிட வேண்டுகின் றனனே.

ஜோ. கா. குமாரசாமி முதலியார்,
ஜோதிட வித்வான், உனனியூர்.

நற்றுணை.

நன்மையிற் சிறிதும் நாட்டமோ இன்றிப்
புன்மையிலேயே பொழுதெலாம் போக்கிப்
திரிய நினையும்என் சிறிய நெஞ்சே!
உரிய செய்தியொன்(று) உரைப்பல், கேட்டி
"எத்துணைத் துணைஎனக் கிருக்கின் றன!" என
மெத்தவும் மகிழ்ந்து விளம்பினை பன்முறை.
அத்துணை யாவையும் ஆய்குவம், ஒன்றேனும்
நித்தியத் துணையோ? நீயே பாராய்:
'தந்தை ஓர் துணை' எனச் சாற்றினை; தந்தையின்
சிந்தைக்(கு) எதிர் சொலின் தீர்ந்ததத் துணையே.
'தாய் ஒரு துணை' எனச் சாற்றினை; அத்துணை
சேய்க்குத் தரித்திரம் சேரின் தீருமே!
'வாழ்க்கைத் துணை ஒரு வன்றுணை' என்றனை;
பாழ்த்த பிணிவரில் பறக்கும்அத் துணையே.
'மக்கள் ஓர் துணை' என வழுத்தினை; முன்னம்
மிக்க குசேலன் விளம்பிய தேராய்:
நீத்த 'இதமுறல் சேயால் எந்நாள்?'
'சோதரர் துணை' எனச் சொல்லினை; அவரைப்
பாதகா லத்திற் பார்த்திலை போலும்?
ஆகையால் இவர்களும் ஆர்துணை இலைபார்.
'சுற்றம் துணை' எனச் சொற்றனை யேநீ;
குற்றம பார்க்கில்அச் சுற்றமும போமே.
'செல்வம் துணை' எனச் செப்பினை பல்கால்;
'செல்வம்' என் பதன்பொருள் தேர்ந்திலை போலும்?
'பூமி முதலாப் பொருந்திய யாவும
ஆம்ஒருத் துணை' என அறைந்தனை அன்றே?
அத்தமும வாழ்வும் அகத்துமட் டேதுணை.
மெத்திய மாதரும் வீதிமட் டேதுணை.
காதலர் களும்சுடு காடுமட் டேதுணை.
ஆதலின் என்னுடை அறிவிலா நெஞ்சே!

இவையெலாம் துணையென எண்ணுதல் ஒழித்தி
நவையில வாம்பிற நற்றுணை நாடுதி.
"இதுதுணை, யார்?" என இடருறல் தவிர்தி.
மெய்த்துணை வேண்டின் விளம்புவல்; கேட்டி:
சாதனை சதுட்டயம் தந்திட வல்லவை,
ஏதமில் பெரும்புகழ் ஈந்திட வல்லவை,
பொருந்திற் கவலை போக்க வல்லவை,
திருந்துமன் னுயிர்க்குச் சேமந் தருபவை,
கல்வியும் அறனுமே காணுதி, ஆதலின்
நல்வினை களில இனி நாடுதி மனமே

A. R. ஸ்ரீநிவாச முதலியார்.
ஆனைமலை.

ஆத்திசூடி வெண்பா.

(17-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

தீக்கைஉப மன்யுவின்பாற் சென்றுபெற்றான் வண்துவரை
காக்குந் திருமாலும கானகத்தே—வாய்க்குமரன்
செப்பரிய பூசனைக்குத் தேறான்போல், ஆதலினால்
ஒப்புரவின் என்றும ஒழுகு.

(இ—ள்) வண்துவரை—வளம் பொருந்திய துவாரகாபுரியினை, காக்கும்—ஆளுகின்ற, திருமாலும் — கண்ணபிரானும்; வாய்க்கும்— (தலத்தாற் கிடைக்கும், அரன்—சிவபெருமானது, செப்பரிய—சொல்வதற் கருமையான,) பூசனைக்கு—பூசை புரிவதற்கு, தேறான் போல்—தெளியாதவனைப் போல (நடித்து), கானகத்தே—(பாண்டவரைக்கண்டு துவாரகையை நோக்கிச் செல்லும் பிரயாணமத்தியில் உள்ள) காட்டினிடத்திலே, உபமன்யுவின் பால்சென்று—வியாக்கிரபாத முனிவரின் புதல்வனான உபமன்னிய முனிவரிடம் போய், தீக்கை—சிவதீட்சையை, பெற்றான் — அடைந்தான், ஆதலினால்—ஆகையினால், என்றும்—எக்காலத்திலும், ஒப்புரவின்—உலக முறையினை அநுசரித்து அதற்கேற்ப, ஒழுகு—நடப்பாயாக.

மும்மூர்த்திகளில் அபேத பாவனையை அர்ச்சுனனுக்கு முதல் நான் புத்தாரம்பத்தில் போதித்தவரும், தம் மீது அருச்சித்த புஷ்பங்கள்

அனைத்தையும் திருக் கைலாசத்திற் சென்று ஆங்கெழுந்தருளி யிருந்த பரமசிவத்தின் திருமேனியின் பேரில் இருப்பதை அருச்சுனனுக்குக் காண்பித்து, மனதைத் திடப்படுத்திய வருமாகிய அக் கிருஷ்ண பகவானே, உலக முறையைத் தாமும் கைவிடக் கூடாதென்று மேலே சுட்டிய காரியத்தை மேற் கண்டனர். எவ்வணமெனில்,

உபமன்னிய பகவானது சிஷ்யர்கள் ஒருநாள் பூஜைக்காக பத்திர புஷ்பம் தேடி அகப்படாமல் மிகவும் வருந்திக் குருவிடம் விண்ணப்பிக்க, அவர் தமது பேரறிவாற் சிந்தித்து, "சமீபத்தில் ஓடிவரும் கான்யாற்றில் பாண்டவர்களைக் கண்டு துவாரகைக்குச் செல்லும் கண்ணன் அடுத்தவன மார்க்கத்தில் தங்கி சிவபூஜை செய்து, அங்ஙனம்செய்த மலர்களைக் களைந்து நதியில் விடுத்தனர். அவைகளை நீங்கள் சென்று எடுத்துவாருங்கள். அவருக்கு சிவதீக்ஷை யாகாததால் அவைகள் நிருமாலியமாகா. அவர் பூஜையும் பூஜையன்று" எனக் கட்டளையிட்டனர்.

அக்கட்டளையைச் சிரசால் வகித்த சிஷ்யர்கள் பரமாதிசயம் கொண்டவர்களாய், அவ்வாறே சென்று கண்டெடுத்து வந்து உபமன்யு பகவானிடம் அளிக்க, அவர் சந்தோஷித்து, தமது சிவபூஜையை முறைப்படி செய்திருந்தனர். இதனையுணர்ந்த கண்ணன், அவர் இருந்த தவச சாலையையடைந்து தமக்கு அவரையே ஆசாரியனாகக் கொண்டு வணங்கி, அவரிடமே சிவதீக்ஷை பெற்றுத் திரும்பித் தமதிருப்பிடம் சென்றனர்" என்பதே.

இச்சரிதையை யுற்று நோக்கு வோர்க்கு, உலகியலைக் கைவிடாமல் கைக்கொள்ள வேண்டியது எத்துணை இன்றியமையாததென்பது விளங்கும். கீதையில் கண்ணன் 'நானே பிரமன்' 'நானே விஷ்ணு' 'நானே உருத்திரன்' என்றது போல, திருவிளையாடற் புராணத்திலும்

"மலரய னாகி மூன்று வையமும் படைத்து, மாலாய்
அலைவற நிறுத்தி, முக்கண் ஆதியாய் அழித்து"

எனப்பரஞ் சோதிமுனிவர் அருளியுள்ளார் "பொன்னொன்று, பலவாம்" என்றும கூறினர் பெரியோர்.

எம்மதத்தினரும் இவ்வாறு எவ்வாற்றானும் இரண்டுபடுத்த வொண்ணாத கடவுட்டன்மை வாய்ந்த கண்ணனே அவ்விதம் நடந்தாரெனில், ஏனையோர் திறத்திற் கூறவும் வேண்டுமோ? காசியில் விசுவலிங்கம் தன்னைப் பூசிக்கு முறையைத் தானே பிறர்க்குக் கற்பிக்கும் கருணையால் தன்னைத் தான் பூசித்தமையே சாலும். ஆதலின், "நாம் அறிவினாலோ, கல்வியினாலோ, கேள்வியினாலோ, செல்வத்தினாலோ, பெரியோம்" எனவெண்ணி அற்பமாகத் தோற்றும் எந்த வழக்கங்களையும் கைவிடக் கூடாது. கை

விடின், ஆன்றோர் முறைமை நாளடைவில் அழிந்து படும். ஆன்றோர் முறைமை யழியின் அனைத்தும பாழ்படும். இதுபற்றியே 'கீழோர் மேலோர, சிறியோா, பெரியோர்' என்னும் பேதம், ஏனைய எல்லா விஷயங்களுக்கும் கொள்ள வேண்டுமாயினும், ஒப்புரவின் ஒழுகலாகிய உலக முறை அநுசரித்தலுக்கும் கொள்ளத் தகுவதன்று.

எப்பெரிய பிழைகள் புரிந்தாராயினும், ஒப்புரவின் ஒழுகினால், அவரை உலகம் மன்னித்துப் பிழைபொறுக்கும். ஒப்புரவின் ஒழுகாதவர் எத்துணை நல்லோராயினும், அவரை உலகில் எவரும் ஏற்கார். இதனை நோக்குமிடத்து, ஒப்புரவின் ஒழுகுவதற்கு மேம்பட்ட நலத்தினைத் தரும் செய்கை மனித வர்க்கத்திற்கே இல்லை யென்று சொன்னல் வேண்டும்.

அசலாம்பிகைஅம்மாள்.

விநோதக் கூற்று.

உபாத்தியாயர்:—"மனக் கணக்கு. கேட்கிறவன் மட்டுமே பதில் சொல்ல வேண்டியது. கவனியுங்கள்: ஒருவன் கோதுமைமா 2 அணு 6 பை; சர்க்கரை 1 அணு 6 பை; நெய் 6 அணு, வாதுமைப் பருப்பு 6 பை; ஏலக்காய் 3 பைசா; இவை வாங்கினுன். எல்லாம் சேர்த்தால் என்ன ஆகும்? குப்பா! நீ சொல்.

துப்பன்:—பேஷான அல்வா ஸார்.

உபா:—(சிரித்து) எவ்வளவடா ஆகும் மடையா? என்ன ஆகுமென்று கேட்டேன்?

துப்:—கிட்டத் தட்ட ஓர் சேர் ஆகுமா ஸார்?

உபா:—கழுதை! எப்போதும தின்பதிலேயே எண்ணம். பணம் எவ்வளவடா ஆகும் என்றால்?

துப்:—அல்வா மட்டும் நன்னு இருந்தா சேர் ரூ 1—8—0 ஸார்.

கமலாவதி.

அங்கம்—4.

காட்சி—2.

இடம் -கொரேசேனன் அரண்மனையிலோர் பாகம். காலம்-பிற்பகல்

கோ. [மனோவியாகுலத்துடன் அங்கும் இங்கும் உலாவிக் கொண்டே தனக்குள்]

ஏன் நான் இக்காரியத்திற் பிரவேசித்தேன்? என்ன பைத்தியக்காரன் நான்? சுகமாக ஸ்ரீதரனே வாழட்டும் என்றிருந்தேனே? இக்காட்டிற கொடியவனுக வேண்டு மென்ற தீய எண்ணம் ஏன்தான் எனக்கு உதித்ததோ? உண்மை வெளி

ப்பட்டு விட்டால் என் கதி யாதாகும்? அப்பொழுது நான் எவ்வளவு திண்டாட்டத்திற் குள்ளாக வேண்டும்! விநாடிப் பொழுதேனும் கவலையற்று இருப்போ மென்றால அது முடியவில்லையே! நான் ராணியின் அரண்மனை செல்லச் சிறிது காமதித்து மட்டும் இருந்திருப்பேனாயின் அந்நிருபம் அவள் கையில் எப்படியும கிடைத்திருக்கு மன்றோ? அஃ தெழுதியவன் யாராயிருக்கலாம்? (சற்று தாமதித்து) உம—என் வீண் கவலை? இனிநாம் செய்ய வேண்டியதென்ன? இந்நாட்டிற் கிறைவனாவதினும நிர்ச்சஞ்சலமாக் காலம் கழித்தலே மேலென எனக்குத் தோன்றுகிறது. இது தான் போகட்டும். "கமலாவதியின் மனத்தை எப்படியாவது மாற்றிவிடலாம்; என்னை அவள் மணஞ் செய்து கொள்ளும்படி செய்துவிடலாம்" என்றல்லவோ கருதியிருந்தேன்? இதுவும செய்ய முடியவில்லையே(சற்று யோசித்துத் திடீரென்று) சீ! இது என்ன மூடத்தனம்! ஆக்கப் பொறுத்த எனக்கு ஆறப் பொறுக்க இல்லையே. இதுவரை நான் செய்து வந்த முயற்சி வீணாகவா போகிறது? ராணிக்கோ நல்ல வேளையாய் நிருப விஷயம தெரியாது. அப்படியிருக்க ஏனோ வீண் கவலை? இனி நான செய்ய வேண்டிய முயற்சியோ சொற்பம்? இச்சமயமா மனதைச் சிதறவிடுவது? நடந்தது நடக்கட்டும். கடைசிவரை ஒருகை பார்த்தே விடுவோம். எனக்கு ஏதோ காரியம் கைகூடி விடுமென்றே தோன்றுகிறது.

[ஒரு சேவகன் பிரவேசிக்கிறான்.]

சே. மகராஜ்! வந்தனம். [வணங்குகிறான்.]

கோ. என்னடா சமாசாரம்?

சே. ஆரோ மகராஜ் மந்திரவாதியாம்! தங்களைப் பார்க்கணுமாம்.

கோ. மந்திரவாதியாவது? தந்திரவாதியாவது? சாவகாசமில்லை. போகச்சொல, (சிறிது யோசித்து) ஏ! ஏ! சீக்கிரம் வரச் சொல் அவனை.

சே. உத்தரவு. [போகிறான்.]

ஜய. (படத்தை நோக்கி) இப்பெண்ணின் படத்தை பார்த்தது இதுவே முதல் தடவை. ஆ! என்ன ரூபம்! (சற்றுத்தாமதித்து) இனி சந்தேகமே வேண்டாம். நான் இன்றே இப் பெண்ணிருக்கும் இடம் சென்று எப்படியாவது காரியத்தை முடித்து வருகிறேன்

கோ. அவ்வளவு சிரமம வேண்டாம் உமக்கு இப்பெண் என் வசத்திலேயே இருக்கிறாள். அவளார தெரியுமோ இல்லையோ? கேகய மன்னர் விக்ரமகேதுவின் மகள் ஐயா அவள்.

ஜய. (தலையை அசைத்துக் கொண்டு) நன்றாகச் சொன்னீர்! நாய்க்குட்டிக்கு என்ன அவ்வளவு தெரியாதா? 'அவள் இருக்குமிடம் போகின்றேன்' என்றேனே யொழிய அவள் 'ஊருக்கா' போகிறேன் என்றேன்? (எழுந்திருந்து) நல்லது. இனிக் கவலை வேண்டாம். நானே இங்கு வருகிறேன்.

கோ. நல்லது. போய் வாரும். எல்லாம் ரகஸ்யமாக இருக்கட்டும்.

[ஜயகேசரி போகிறான்]

நான் வீண் கவலை யன்றோ கொண்டேன்! இந்நாட்டிற்கு இறைவன நானே என்பதில் இனி யாது தடை? கமலாவதிக்கு மட்டும் என் மீது காதல் ஏற்பட்டு விட்டால் என்ன போன்ற பாக்கிய சாலி யார்? [போகிறான்]

(காட்சி முடிகின்றது.)

K. வேங்கடராமையர்.

சோழவந்தானூர் அரசஞ் சண்முகனார் இயற்றிய

வள்ளுவர் நேரிசை.

(45-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

பல்லா யிரவர்க்கூண் பாண்டு மகன்படைத்தான்
வல்லாத காட்டிலும்போய் வள்ளுவரே!—சொல்லின்
வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று. (ட)

(அ-ம் முதலியன)—ஊண்-உணவு, பாண்டுமகன்-யுதிட்டிரன், வல்லாத-கொடிய, வைகலும்-நாள் தோறும்; பருவந்து-துன்பத்தால் வருந்தி, பாழ்படுதல் இன்று-கெடுவது இலலை.

பாண்டு மகன் வல்லாத காட்டில் பல்லாயிரவர்க்கு ஊண் அளித்தது:— பாண்டவர்கள் சூதாட்டத்தில், தமது நாடு நகர மிழந்து வனவாசஞ் செய்ய நேரிட்டதைத் தௌமியர் முதலிய பன்னீராயிரம் வேதியரும் கேள்வியுற்றனர். இப்பன்னீராயிரவரும் தரும புத்திரனோடு எப்போதும் இருந்தவர்கள் ஆதலின், அவன் வனத்திலிருக்கும் போதும் சென்று, தருமனை நோக்கி "நீர் நிரம்பிய காலத்தில் குளத்தில் இடைவிடாது இருந்து அஃதில்லாக் காலத்தில் அதினின் றகலும் பறவை போன்றவரல்லர் நாங்கள். அக்குளத்துக் கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போன்றோரே. ஆதலின் உன்னிற் பிரியோம்" என்று அவனிடமே இருந்து விட்டனர். இங்ஙனம் அவர்கள் கூறியதைக் கேட்டதும், தருமன் தனக்கும், தன்சகோதரர்க்கும் பாஞ்சாலிக்குமுற்ற பரிபவத்தையும் கஷ்ட நிஷ்டூரங்களையும் மறந்து, "ஐயோ! எங்கள் நிலைமை எவ்வாறாயினும் ஆகுக. என்னை யடுத்திருக்கும் இப்பன்னீராயிரவரும் பசிப்பிணியால் வருந்தித் தவிப்பரே. இவ்வளவு அன்புள்ளவர்களை 'என்னிடம் இராதேயுமென்' என்று எப்படிச் சொல்வேன்?" என்று நெருப்பில் விழுந்த புழுப்போலத் துடித்தான். அச்சமயம் சவுனகர் என்ற மகரிஷி தருமனிடம் வந்து, அவன் விசனத்துக்குக் காரணம் கேட்டறிந்ததும் அவனைத் தேற்றி, ஒரு மந்திரத்தை உபதேசித்து, 'இது சூரியனைக் குறித்தது. இதை நியம நிஷ்டையுடன் உச்சரிப்பையாயின் அவனால் உன்குறை தீரும்" என்று சொல்லிச் சென்றனர். தருமனும் அவ்வாறே அதை ஜபிக்க, சூரியன் அவன் முன் தோன்றி, 'நீ வேண்டும் வரம் கேள்' என்றான். தருமன் பன்னீராயிரவர் நிலைமையையும் கூறிக் குறை யிரக்க, சூரியன் மகிழ்ந்து தருமனை நோக்கி, "இதைக் கைக் கொள்வாயாக. இஃதொரு அக்ஷயபாத்திரம். அறுசுவை உண்டியும் அளிக்க வல்லது இது. எத்துணைப் பேருக்கும் இது உண்டி தர வல்லது" என்று கூறி ஒரு தெய்விகப்பாத்திரம் அளித்துச் சென்றான். இதனால் சகலரும் சம்பிரமமாக உண்டு மகிழ்ந்து வந்தனர். என்பதே.

வெகுதுர்வாசர்க்கு மாவிருந்து செய்தமையால்
மைந்துற்றான் மாயோனும் வளருவதோ!—நந்தா
அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந் தோம்புவான் இல் (அ)

(அ-ம் முதலியன):—மைந்து-வலிமை, மாயோன்-ஸ்ரீ கிருஷ்ணன், நந்தா-அழியாத, அகன்அமர்ந்து-மனம் விரும்பி, செய்யாள்-லக்ஷ்மி, உறையும்-வசிப்பள், விருந்து-விருந்தினரை, இல்-வீட்டில்.

துருவாசர்க்கு மாயோன் விருந்தளித்தது:— பரம கோபிஷ்டராகிய துர்வாச மாமுனிவர், ஒருநாள் ஸ்ரீ கிருஷ்ணனைக் கண்டு, "நான் உனது

அதிதி.சாந்திராயணவிரதம் ஒரு மண்டலம் அநுஷ்டிக்க எனக்கு விருப்பம். என் கோபம் நீ அறிவாய். என் மனம் திருப்தியுறுமாறு நீ நடந்து கொள்ள முடியுமாயின், உனது ஆதித்யம் ஏற்கிறேன்" என்ன, கண்ணன், துர்வாசர் மனப்படி நடப்பதாக முழுமனத்துடனும் ஒப்புக் கொண்டான். கடைசி தினத்தில், முனிவர் தமக்குப் பண்ணிய பாயாசத்தைத் தம் உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரையில் தடவுமாறு ஸ்ரீ கிருஷ்ணனுக்கும் ருக்மணிக்கும் ஆக்ஞாபிக்க, அவர்களும் அவ்வாறு செய்து மனமகிழ்வித்தனர்" என்பதே. (இச்சமயந்தான், பாயசம், துர்வாசரது கட்டை விரலிற் படாமையால், அவர் சினந்து, ஸ்ரீ கிருஷ்ணனை நோக்கி, "நின் கட்டைவிரலில் அடிபட்டு நின் உயிர் பிரிவதாக" எனச் சாபமிட்டதென அறிக. சிற்க.

பாண்டவர்கள் வனவாசம் செய்த காலத்தில் துர்வாசர் தம்மைத் திருப்திப் படுத்திய துர்யோதனனுடைய வேண்டுகோட்கிணங்கி, தருமனிடம் சென்று, தமக்கும் தம்முடன் வந்தார்க்கும் விருந்தளிக்கவேண்டுமெனக்கூற, ஸ்ரீகிருஷ்ணன் உண்மையறிந்து, அக்காலத்தில் வந்து அவரது சினத்திற்கு அஞ்சித்தவித்த பாண்டவர்க்கு அமைதியுண்டாகுமாறு ஒரு அவிழ்தை உண்டு, முனிவர் வயிறும், அவருடன் வந்தோர் வயிறும் நிரம்புமாறு செய்து, அவர்களை மகிழ்வித்ததும் "ஸ்ரீ கிருஷ்ணன் துர்வாசர்க்கு விருந்தளித்து மகிழ்வித்ததாக"க் கொள்ளுவர் சிலர்.

(இன்னும் வரும்.)

ம. கோ.

புத்தகமதிப்புரை.

பழமொழி நானூறு:—பாண்டிய மன்னர்கள் தமிழ்மொழி வளர்ச்சியின் பொருட்டு முதலிடை கடை யென்னும் முச்சங்கம் நிறுவித் தமிழைப் பாதுகாத்து வந்தனரென்பது யாவருமறிந்ததே. இங்ஙனம் நிறுவப் பெற்ற சங்கமருவிய நூல் எண்ணிறந்த. அவற்றுள் கடைச்சங்கம் மருவிய நூல்களை 'மேற்கணக்' கெனவும், 'கீழ்க்கணக்' கென்றும், இருவகையாகப் பகுத்துள்ளனர் முன்னையோர். அவற்றுள் கீழ்க்கணக்கு இவை என,

"நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி—மாமூலம்
இன்னிலைசொல் காஞ்சியுடன் ஏலாதி என்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு"

எனவரும் வெண்பாவால் விளங்கும். இவற்றுள் பழமொழி நானூறு என்னும் இவ்வரும் பெரும் நூலானது, சொன்னோக்கு தொடைநோக்கு முதலியன அமையப்பெற நிருப்பதோடு, பண்டைக்காலத்துத் தண்டமிழ் மக்களின் ஒழுக்க வழக்கங்கள் இத்தன்மையவென யாவரும் வெளிதிலுணரும் வண்ணம் படைப்புக் காலந்தொட்டுப் பயின்றுவரும் பழமொழிகளைத் தன்னகத்தடக்கி, (திருக்குறள், நாலடி, போலச்,) சுருங்கச் சொல்லுதலும், பொருளாழ முடைத்தாதலுமாகிய வனப்பு மெய்திக் கற்பார் நெஞ்சங் கழிபேருவகை யெய்தும் வண்ணஞ் செய்யுமென்பது நம் தமிழக மறிந்ததேயாம்.

இவ்வரிய நூலிற்குப் பண்டைக் காலத்தாசிரியர் இயற்றிய பொழிப்புரை யொன்றுள்ளது. இந் நூலினருமை பெருமையை யுணர்ந்து நீங்கட்குக்கிடைத்த இரண்டொரு-பிரதிகளை வைத்து மூலத்தை முழுதும் அச்

சிட்டவரும், முழுதும் சிலபாக்களின்றிக் கிடைத்தவற்றை யச்சிட்டவரும், முன்னுள்ள பொழிப்புரையோடு, தம் புத்தி சாதுரியத்தை யனுசரித்து விசேடவுரை வரைந்து அச்சிடுபவரும் பலராவர். இவற்றைக் கற்கும் மாணவர்கள், குன்று முட்டிய குரீஇப் போலவும், குறிச்சிபுக்க மான் போலவும் இடர்ப்பட்டு, உண்மைப் பொருளும் பாடமும் இன்னவென விளங்காமையால் மயங்கி, இந்நூல் பயிலுதலை யறவே ஒழித்தனர்.

இதனையுணர்ந்து, தொன்று தொட்டு வந்த தமிழ்ப்பழங்குடியிற் பிறந்தவரும், ஆங்கிலத்தில உயர்ந்த எம். ஏ. முதலிய பட்டங்களைப்பெற்றிருந்தும், அதனையே யோதிக் காலத்தைக் கொன்னே கழிக்காது, தமிழ்நூல் ஆய்தலையே பொழுது போக்காகக் கொண்டவரும், பண்டைத் தமிழ் நூலாசிரியர் உரையாசிரியர் மாட்டுள்ள பேரன்பால் அவர்கள் பெயரைத் தம் அரும் பெறற் குழவிகட்கிட்டழைப்பவரும், பச்சையப்பன் உயர்தரக் கல்லூரியில் தமிழ்ப் புலமை நடாத்திய மஹா வித்துவான் திரு மணம்—கேசவ சுப்பராய முதலியாரவர்கள் புதல்வரும், பச்சையப்பன் காலேஜ் தமிழ்ப் போதகரும், 'ஆசாரக்கோவை'யை அச்சியற்றி வெளியாக்கிய மகோபகாரியுமான செல்வக் கேசவராயமுதலியாரவர்கள். தம் அரும் பெறற் றந்தையார் பயின்ற பழமொழிப் பிரதியையும், ஏனைய பல தமிழ பிமாணிகள் கொடுத்த பிரதிகளையும் ஒப்புநோக்கி, சுத்தபாடங்களை யாய்ந்து, முன்னுள்ள பொழிப்புரையோடு,(மாணவர்கள் உண்மைப் பொருள் காணாது மயங்காவண்ணம்,) ஒவ்வொரு பாட்டின் தலைப்பிற் கொளுவும், இனிய செவ்விய நடையில் யாவரும் அறியும் வண்ணம் பதவுரையும் வரைந்து, பழமொழிகளைச் சிலரைப் போல வலிந்து பிடித்திர்த்துக் கற்பிக்காது, உலகவழக்கோடு பயின்றுவரும் பழமொழிகளை யாவரும் இலகுவில் அறியும் வண்ணம் விளக்கிக் காட்டி, பழமொழிகளின் வடிவந்தோன்றுதனவற்றை வாளாவிடுத்தும், புராண இதிகாசங்களிலிருந்து நூலாசிரியர்கள் எடுத்தாண்ட விஷயக்குறிப்பு, பொருளடக்கம், இன்றியமையாதனவற்றிற்கு ஆங்கிலப் பழமொழி, அரும்பத வகராதி முதலியன, சேர்த்தும், 'கடவுள் வாழ்த்து' நீங்கலான முன்னூற்றுத் தொண்ணூற்றொன்பது செய்யுள்களையும் ஐந்து பெரும் பிரிவுகளாகவும், ஏற்ற பெற்றி ஒவ்வொன்றையும் சிறிய உட்பிரிவுகளாகவும் பிரித்துச் செப்பஞ் செய்தும், அச்சியற்றி வெளியிட்டுள்ளார்கள். முதலியாரவர்கள் செய்த இவ்வரும் பெருங் காரியத்திற்குத் தமிழுலகம் நன்றிபாராட்டுங் கடப்பாடுடையதே.

இவ்வுரையைத் தனித்தமிழ்க் கலாசாலையிலும், ஆங்கில உயர்தர கலாசாலைகளிலும் மாணவர்கட்குப் பாடமாக ஏற்படுத்தின அம்மாணவர்கள் ஒழுக்க முடையராய், உலகநெறியினை யறிந்து நடத்தற்கும், நம் பண்டைத்தமிழ் மக்களின் பூர்வ நிலையினை யுணர்ந் தின்புறுவதற்கும் ஏதுவாயிருக்கு மென்பது எமது துணிவு. இதன் விலை ரூ. 2.

பத்திராதிபர்.

சமாசாரக் கொத்து

தேவகோட்டை சிவாகம சித்தாந்த பரிபாலன சபை''யின் முதலாவது ஆண்டு நிறைவு விழா ஏப்ரல்மீ 21, 22, 23உ களில அம்பா சமுத்திரம் வக்கீல் ஸ்ரீ வி. பி. காந்திமதிநாதபிள்ளையவர்களின் அக்ராசனத்தின்கீழ்ச் சிறப்பாகநடைபெற்றது. விபரம் கிடைத்தபின் அறிவிப்போம்.

மதுரை "எங்மென்ஸ் ஆமெச்தூர் அஸோஸியேஷன்" என்ற வாலிபர் விதநியாதூ சங்கத்தார் நட்த்திய போட்டிச் சோதனைக்கு எண்மர் தம் சிறு நாடகங்களை அனுப்பினர். இவர்களுள் பீ.எஸ். சங்கரையரதே சிறந்ததாக நிரணயிககப்பட்டதால், அவர்க்கு ஒரு பொற்பதக்கம் கொடுபடும் என அறிந்து மகிழ்கிறோம்.

'பரிதிமாற் கலைஞன் புஸ்தகசாலை:— சித்திரை மீ 1வ சிரஞ்சீவி வி.கு. நடராஜன், தன்தந்தை ஸ்ரீ வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியாரின் ஞாபகார்த்தமாக ஸ்தாபித்த இது, ஸ்ரீ ம. கோபால கிருஷ்ணையரால திறக்கப்பட்டது. ஐயரவர்களும், ஸ்ரீ தி. செல்வ கேசவராய முதலியார், ராவ் ஸாஹிப் ப.சம்பந்த முதலியார் முதலியோரும் இதற்குத் தம்மாலியன்ற உதவி புரிந்துள்ளனா.

ஓர் விசனகரமான மரணம்.—குட்டிலொட்டி என்ற அழகிய நல்லூர் வாசியான சற்குண சமபன்னராகிய ஸ்ரீ அழகர் ரெட்டியாரின் ஏரே அருந்தவப் புதல்வரான நாராயண ரெட்டியாரின் அகால மரணத்தை அதி துக்கத்துடன் அறிவிக்கின்றோம். ஏப்ரல் மீ 5வ இக வுலகு நீதத இவரைப் பற்றிய பிறவிஷயங்கள் அடுத்த சஞ்சிகையில் வெளிவரும்.

நெல்லை வாசிகட் குற்ற சிற்சில அசௌகரியங்களால் மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத் தின் 16-ஆவது வருஷோத்ஸவம் நாம் முன்பு அறிவித்தபடி மே மீ 18வ நடைபெறுமென்றும் ஜூன் மூ. துற்றலத்தில் நடைபெற ஏற்பாடாயிருக்கிறதென்றும் நமக் கறிவிக்கப் பட்டிருக்கிறது.

"மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் கவனித்துத் தீரக் கடமைப் பட்ட விஷயங்கள்" அடுத்த சஞ்சிகையில் வெளிவரும்.

எஸ். வ. ஷாஅட்டி துரை மதுரைக் காலேஜ் பிரின்ஸிபாலாக ஒரு வருஷத்திற்கு நியமிக்கப் பட்டிருக்கின்றனர். —பத்திராதிபர்.

ஸ்ரீ வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் நூல்கள்.

மனம் போல வாழ்வு:—இஃது இம்மை மறுமை இன்பங்களை அடைதற்குரிய நெறிகளைத் தெளிவாகக கூறும் அரிய நூல். இது முற்றிலும் திருத்தப்பட்ட இரண்டாம் பதிப்பு.

மெய்யறிவு:—இதில் அறமும் பொருளும் இன்பமும் வீடும் அவற்றைச் செய்யும் வழிகளும் பலஉபமானங்களோடு மிகச் சுருககமாகவும் விளக்கமாகவும் கூறப்பட்டுள. இது நீதிநூலகளின் காரணமெனத் தககது.

அகமே புறம்:—இகத்திலும் பரததிலும் மேலான நிலைகளை அடைதற்குரிய மார்க்கஙகளை வரிசைப்படுத்தி இனிமையாகக்கூறும் ஒரு சிறந்த நூல. இதனை ஒவவொருவரும கற்றல இன்றியமையாதது.

வலிமைக்கு மார்க்கம்:—இதில் எளியநிலைமையை எய்தியுள்ளோர் வலிய நிலைமையை எய்துதற்குரிய வழிகள் விரிவாகவும் தெளிவாகவும் யாவரும் கைக் கொள்ளத்தகக விதத்திலும் கூறப்பட்டுள்ளன. இதுவும் வெளிவந்து விட்டது.

ஒவ்வொன்றின் விலையும் அணாஎட்டு. வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெறுக.

வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள், பிரம்பூர், சென்னை.

குறைந்த சந்தா! ஆர்டருக்கு முந்துங்கள்!!

1916ஞ நவம்பர் மாதம் முதல் வெளிவருவது.

கற்பகம்.

இது தமிழ்ப் பாஷையைப் பரவச் செய்து பொது ஜனங்களின் க்ஷேமத்திற்காக உழைக்கும்

ஓர் இனிய செந்தமிழ் மாத சஞ்சிகை.

வருஷ சந்தா தபால் சார்ஜ் உட்பட

உள்நாட்டிற்கு 0—12—0 வெளி நாட்டிற்கு 1—0—0

இதில் வித்தியா விஷயம், கல்வி, சாஸ்திரம், சுகாதாரம், வைத்யம், விவசாயம், வியாபாரம், கைத்தொழில், வேதாந்தம இராஜாங்க விஷயம், ஜனங்க சீர்திருத்தம், இராஜ பக்தி, நூதன கற்பிதங்கள், மதவிஷயம், சிறுவர் சிறுமிகளுக்கான விஷயங்கள், உலக அற்புதம், வர்த்தமானம், விநோதக் கூற்று முதலான அரும் விஷயங்கள் வித்வத்சிரோ மணிகளால் எழுதப்பட்டு வெளிவருவது.

ஒவ்வொருவரும் தங்கள் தங்களால் இயன்ற வரையில் சந்தாதாரர்களைச் சேர்த்துக்கொடுத்து நம் பத்திரிகையை ஆதரிக்குமாறு வேண்டுகின்றனம்.

N. B. பத்து சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுப்பவர்களுக்கு ஒரு வருஷப் பத்திரிகை இனாம்.

மானேஜர்.

"கற்பகம்." புதுவை.

ஞானகாந்தி.

குசாவதி — மூன்று இனிய தமிழ் நாவல்கள். — காதலி?

இவற்றின் அருமை பெருமைகள் தமிழ்நாடு முழுதும் அறியும். ஒவ்வொன்றின் விலை அணா—12

அன்பானந்தன் — சந்திரசேகரி

இவை இரண்டும் அன்பின் உயர்வையும், காதலின் இன்ப துன்பங்களையும். உலகத்தில் உள்ள போலி வேஷங்கள் பலவற்றையும், விளங்கக் காட்டி மனத்திற் பதித்து அறிவைத் திருத்துவன இனிய நடையில் நவரசங்களும் பொருந்த எழுதப் பெற்றுள்ளன:—ஒவ்வொன்றின் விலை ரூ 1—0—0. கிடைக்குமிடம் 'ராஜேந்திர விலாஸ்' வால்டாக்ஸ் ரோட், சென்னை.

ஜ்ஞோபகாரி.

பொது ஜனங்களுக்குள் அறிவைப் பரவச்செய்து, அவர்களின் முன்னேற்றத்திற்கென்றே உழைத்துவரும் ஓர் சிறந்த தமிழ் மாதாந்தப் பத்திரிகை.

இப் பத்திரிகையில் கல்வியபிவிருத்திக்குரிய பல விஷயங்கள், இந்திய விவசாயத்தைப்பற்றிய பல விஷயங்கள், கைத்தொழில், வியாபாரம், கூட்டுறவு, ஜனஸமூகத்தின் அபிவிருத்திக்குரிய பல விஷயங்கள், சிறந்த நீதிகளை போதிக்கக்கூடிய நாவல்கள், நாடகங்கள், மாணவர்களுக்கு உபயோகமான வியாசங்கள், நம் தேசத்தின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட மகான்களின் ஜீவிய சரித்திரங்கள் ஸ்திரீகளுக்கும் சிறுவர்களுக்கும் உபயோகமான பல நற்போதங்கள் ஆகிய பல விஷயங்களைக் குறித்துச் சிறந்த கற்றறிந்தவர்களால் வியாசங்கள் எழுதப்பட்டு வருகின்றன. நடை தெளிவானது. சிறுவர் சிறுமியர் முதலிய யாவரும் சுலபமாய்ப் படித்தறியக் கூடியது.

வருஷ சந்தா விகிதம்	இந்தியா, பர்மா, சிலோனுக்கு	ரூ. 3—0—0
	வெளிநாடுகளுக்கு ...	... ரூ. 4—8—0

ஔவை.

நம அருந்தமிழ மொழியில் சிறந்த நீதி நூல்களையும் தனிப் பாடல்களையும அருளிச்செய்து உலகத்தை உய்வித்த ஔவையாரின் திவ்விய சரித்திரம. பல நூல்களைத் தழுவியும புலவர்களின் கர்ண பரம்பரையை அநுசரித்தும, வேலூர் ஊரீஸ் காலேஜ் தலைமைத் தமிழப்பண்டிதர் பு. க. ஸ்ரீநிவாஸாசாரியாரால் எழுதப் பட்டது.

விலை அணா 6

"ஜ்ஞோபகாரி" சந்தாதார்களுக்கு மாத்திரம் அணா 5.

காரைக்காலம்மை சரிதை.

கற்பிலும் ஈசுவர பக்தியிலும் சிறந்த பெண்மணியும், சிவனடியார் அறுபத்துமூவரில் ஒருவரும், தெய்வக் கவிஞருமாகிய காரைக்காலம்மை யென்னும புனிதவதியாரது இனிய சரித்திரம்.

விலை அணா 1.

மானேஜர்,

ஜ்ஞோபகாரி ஆபீஸ்,

வேலூர்.

ஸ்ரீ கிருஷ்ண விலாஸம் பிரஸ், திருமங்கலம்.

கந்தபுராணம்

மூலமும் உரையும்.

ஸ்ரீ கச்சியப்ப சிவாசாரியாரால் அருளிச் செய்யப் பெற்ற கந்தபுராணம் செய்யுள் 10346 அடங்கிய ஆறுகாண்டங்களுக்கும் "கலா பூஷண" மென்னும் மிக்க அருமை வாய்ந்த உரை யெழுதி, நல்ல சுதத்தில் அச்சிட்டு அநேக சித்திரப் படங்கள் சேர்த்து 2-புத்தகமாக உயர்ந்த காலிகோ பயிண்டு செய்துள்ளது.

சேட்டு 1-க்கு விலை ரூ 10 வி. பி. செலவு ரூ 1.

61-வருஷ பஞ்சாங்கம்.

இது இங்கிலீஷ் 1854௵ (முன் ஆநந்த) முதல் 1915-௵ (சென்ற ஆநந்த௵) வரையிலுமுள்ள பழைய பஞ்சாங்கங்களை யெல்லாம் வாக்கிய முறையாகத் தொகுத்து ஆண்டு, மாதம், தேதி, வாரம், திதி, நக்ஷத்திரம், யோகம், கரணம், பாதசாரம் முதலிய சகல அங்கங்களுடன் அநேக ஜோதிஷப் பொது விஷயங்களையுஞ் சேர்த்து நன்றாய் அச்சிட்டு வெகு அழகான காலிகோ கிலிட் பயிண்டு செய்துள்ளது.

இப்பஞ்சாங்கத்தின் பிரயோசனத்தை சர்வத்தாரும் எதிர் பார்க்கக் கூடுமாகையால் படித்த வகுப்பாரனைவோர்களும் ஒவ்வொரு புத்தகம் வாங்க வேண்டிய தவசியம். சொற்பப் புத்தகங்கள் தான் கைவசமிருக்கின்றன.

விலை ரூ 5—0—0.

வி. பி. செலவு ரூ 0—8—0.

வான சேகர சத்தகோள தீபம்

(அரிய ஜோதிட நூல்.)

இது மிக்க அருமை வாய்ந்ததும் பல பாகங்களை அநேகமேற் கோட்களுடன் விளக்கிக் காட்டும் அரும் பெருஞ்சோதிட சாஸ்திரமுமாகும்.

விலை ரூ 1—8—0.

குறிப்பு:—இன்னும் சகலமான புத்தகங்களும் நமது புத்தக சாலையில் விலை சகாயமாகக் கிடைக்கும் காட்லாக்குக்கு எழுதுங்கள்.

ஜோதிட சாஸ்திரி

S. கூடலிங்கம் பிள்ளை,

"புத்தகசாலை" மதுரை.

இந்தியாவில் மிகப்பெரிதும் பழமையுமான வைத்தியசாலை எது?

1881-ஞூம் ஜாம்நகரில் ஸ்தாபிக்கப்பட்ட

ஆதங்கநிக்ரஹ ஔஷதாலயம்.

குழந்தைகளுக்கு சகலரோகங்களையும் குணப்படுத்தும்

சஞ்சீவி

பாலமித்ர

300மாத்திரை கொண்ட டப்பி 1-க்கு ரூபா 1.

வியாதியைப்பற்றி விபரமாய்தெரிவிப்போர்க்கு நன்றாய் ஆலோசனைசெய்து திருப்தியான விடை கொடுக்கிறோம்.

கடிதங்களுக்கு உடனே பதில் எழுதப்படும்

இந்த

ஔஷதாலயத்தில் விருத்த வைத்திய பாரங்கதரும், வித்தியா பட்டம்பெற்ற மேதாவிகளும், சாஸ்திர சம்பன்னர்களுமதிறமை வாய்ந்த அதிகாரிகளுமாக நூற்றுக்கணக்கான ஜனங்கள் உத்தியோகம்செய்கிறார்கள்

முதன்மையான

மருந்து சென்ற 55 வருஷகாலமாகப் உபயோகிப் போருக்கு அற்புத குணத்தைக் கொடுத்து தேகபலத்தையும் மனோவளமையும் கொடுத்து பெரும்புகழ் படைத்திருக்கிற ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

32 மாத்ரையின் விலை ரூ 1.

வைத்திய சாஸ்திரி
மணிசங்கர் கோவிந்தஜீ
ஆதங்க நிக்ரஹ
ஔஷதாலயம்
45, மேலக் கோபுர வீதி,
மதுரை.

இருமல், கபம் காசம்இவைகளுக்குநிச்சமருந்து காசாந்தக மாத்ரைகள் டப்பிக்குவிலை ரூ 1

இதுவரை எங்கள்கேட்லாக்கை பார்த்திராவிடில் உடனே உங்கள் விலாசத்தைஎழுதுங்கள். எவ்வித செலவில்லாமலும் இனமாய் அனுப்புகிறோம்.